# தமிழகத்தில் ரவுடிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடரும் - டிஜிபியாக பொறுப்பேற்ற சங்கர் ஜிவால் உறுதி




**சென்னை**: தமிழகத்தில் ரவுடிகள், கள்ளச்சாராயத்துக்கு எதிரான நடவடிக்கை தொடரும். பொதுமக்கள் - போலீஸார் இடையே நல்லுறவை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என புதிதாக பொறுப்பேற்றுக் கொண்ட டிஜிபி சங்கர்ஜிவால் தெரிவித்தார்.

தமிழக டிஜிபி சைலேந்திரபாபு நேற்றுடன் பணி ஓய்வு பெற்றார். அந்த பணியிடத்துக்கு சென்னை காவல் ஆணையராக இருந்த சங்கர் ஜிவால் நியமிக்கப்பட்டார். இந்நிலையில், டிஜிபி அலுவலகத்தில் புதிய டிஜிபியாக சங்கர்ஜிவால் நேற்று மதியம் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தமிழக காவல் துறை பல்வேறு சிறப்பான பணிகளைச் செய்து வருகிறது. அதேநேரம் ரவுடிகள், கள்ளச்சாராயத்துக்கு எதிரான நடவடிக்கை தொடரும். போலீஸாரின் நலன் காக்க பல புதிய திட்டங்கள் உள்ளன. தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சிறப்பாக உள்ளது. அதை மேலும்சிறப்பாக்க நிறைய தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளது.

காவல்துறையில் போதுமான காவலர்களை நியமிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.போலீஸார் - பொதுமக்கள் இடையே நல்லுறவை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**ஏராளமான திட்டங்கள்:** அதேபோல், காவல் நிலையத்துக்கு புகார் அளிக்க வருவோரின் குறைகளை விரைந்து போக்க நடவடிக்கை எடுக்கப்படும். காவலர்களின் நலன் காக்கும் நடவடிக்கையை மேம்படுத்த உள்ளோம். சாலை விபத்துகள் நடைபெற்ற இடங்களை அடையாளம் கண்டு, விபத்துகள் மற்றும் விபத்து மரணங்களை குறைக்கவும் முயற்சி எடுக்கப்படும். சென்னை பெருநகரில் ஏராளமான திட்டங்களை கொண்டு வந்துள்ளோம். அதில், எந்தெந்த திட்டங்களை தமிழகம் முழுவதும் கொண்டு வரலாம் என ஆலோசித்து வருகிறோம். முதல்வர் எப்படி எதிர்பார்க்கிறாரோ அவ்வாறு சிறப்பான பணி நடைபெறும். இவ்வாறு சங்கர் ஜிவால் கூறினார்.

டிஜிபியாக பொறுப்பேற்றுக் கொண்ட சங்கர் ஜிவாலுக்கு தமிழகம் முழுவதிலும் இருந்து வந்த போலீஸ் அதிகாரிகள் வாழ்த்து தெரிவித்தனர். முன்னதாக டிஜிபிசங்கர் ஜிவால், முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்துபெற்றார்

**புதிய தலைமைச் செயலராக பொறுப்பேற்றார் சிவ்தாஸ் மீனா - டிஜிபி சங்கர் ஜிவால், சென்னை ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் பொறுப்பேற்பு**

**சென்னை**: தலைமைச் செயலராக இருந்த வெ.இறையன்பு நேற்றுடன் ஓய்வு பெற்றதை அடுத்து, தமிழக அரசின் 49-வது தலைமைச் செயலராக சிவ்தாஸ் மீனா பொறுப்பேற்றுக் கொண்டார். சைலேந்திர பாபு ஓய்வு பெற்றதை தொடர்ந்து, தமிழக டிஜிபியாக சங்கர் ஜிவால் பொறுப்பேற்றார். சென்னை பெருநகர காவல் ஆணையராக சந்தீப் ராய் ரத்தோர் பொறுப்பேற்றுள்ளார்.

தமிழகத்தில் கடந்த 2021-ல் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு பொறுப்பேற்றது. முதல்வர் ஸ்டாலின் மே 7-ம் தேதி பொறுப்பேற்ற நிலையில், அன்றே தலைமைச்செயலராக இருந்த ராஜீவ் ரஞ்சன் மாற்றப்பட்டு புதிய தலைமைச் செயலராக வெ.இறையன்பு நியமிக்கப்பட்டார். கடந்த 2 ஆண்டுகள் தலைமைச் செயலராக பணியாற்றிய இறையன்பு நேற்றுடன் ஓய்வு பெற்றார். இதையடுத்து, புதிய தலைமைச் செயலராக கடந்த 1989 பிரிவு ஐஏஎஸ் அதிகாரியும், தமிழக நகராட்சி நிர்வாகத் துறை செயலராக இருந்த ராஜஸ்தானை பூர்வீகமாக கொண்ட சிவ்தாஸ் மீனா நியமிக்கப்படுவதாக தமிழக அரசு அறிவித்தது.



தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று சந்தித்து வாழ்த்து பெற்ற புதிய தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா.

நேற்று மாலை 5 மணிக்கு தலைமைச் செயலராக இருந்த வெ.இறையன்பு பணியில் இருந்து பிரியா விடை பெற்ற நிலையில், புதிய தலைமைச்செயலராக சிவ்தாஸ் மீனா பொறுப்பேற்றார். அவரிடம்பொறுப்புகளை இறையன்பு ஒப்படைத்து, பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார். பின்னர், அனைத்து அதிகாரிகளிடமும் விடை பெற்று புறப்பட்டுச் சென்றார்.

முன்னதாக, நேற்று காலை முதல்வர் ஸ்டாலினை சந்தித்த, தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, ‘இந்து தமிழ் திசை’ வெளியீடான ‘மாபெரும் தமிழ்க்கனவு’ நூலை முதல்வரிடம் அளித்து வாழ்த்து பெற்றார்.

**டிஜிபியானார் சங்கர் ஜிவால்:** தமிழக டிஜிபி சைலேந்திரபாபு நேற்றுடன் ஓய்வு பெற்றார். அந்த பணியிடத்துக்கு சென்னை காவல் ஆணையராக இருந்த சங்கர் ஜிவால் நியமிக்கப்பட்டார். இந்நிலையில், டிஜிபி அலுவலகத்தில் 31-வது டிஜிபியாக சங்கர் ஜிவால் நேற்று மதியம் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரிடம் பொறுப்புகளை சைலேந்திர பாபு வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

டிஜிபியாக பொறுப்பேற்றுக் கொண்ட சங்கர் ஜிவாலுக்கு தமிழகம் முழுவதிலும் இருந்து வந்த போலீஸ் அதிகாரிகள் வாழ்த்து தெரிவித்தனர். முன்னதாக டிஜிபி சங்கர் ஜிவால், முதல்வர் ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

**ஆணையராக சந்தீப் ராய் ரத்தோர்:** சென்னை பெருநகர புதிய காவல்ஆணையராக நியமிக்கப்பட்ட சந்தீப்ராய் ரத்தோர் நேற்று

EVA STALIN IAS ACADEMY

வேப்பேரியில் உள்ள காவல் ஆணையர் அலுவலகத்தில் முறைப்படி பொறுப்பேற்றுக் கொண்டார்.

முன்னதாக தனது பொறுப்புகளை சங்கர் ஜிவால், அவரிடம் ஒப்படைத்தார். புதிய காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோருக்கு சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையர்கள் பிரேம் ஆனந்த் சின்ஹா (தெற்கு), லோகநாதன் (தலைமையிடம்), கபில் குமார் சி.சரத்கர் (போக்குவரத்து) மற்றும் இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் வாழ்த்து தெரிவித்தனர்.

**சாத்தான்குளம் கொலை வழக்கை 3 மாதத்தில் முடிக்க வேண்டும்: உயர் நீதிமன்றம் உத்தரவு**



**மதுரை**: சாத்தான்குளம் இரட்டை கொலை வழக்கை 3 மாதத்தில் முடிக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சாத்தான்குளத்தைச் சேர்ந்த வியாபாரி ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோர் 2020-ல் சாத்தான்குளம் போலீஸாரால் விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டு உயிரிழந்தனர். இது தொடர்பாக சிபிஐ கொலை வழக்கு பதிவு செய்து காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், சார்பு ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ் மற்றும் ஒரு சிறப்பு சார்பு ஆய்வாளர், 5 காவலர்களை கைது செய்தது.

இந்த வழக்கு மதுரை முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது. விசாரணையை விரைவில் முடிக்கக்கோரி ஜெயராஜ் மனைவி செல்வராணி உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல்

செய்தார். அவரது மனுவை ஏற்று விசாரணையை முடிக்க கீழமை நீதிமன்றத்துக்கு காலக்கெடு விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. அந்த காலக்கெடு இரு முறை நீட்டிக்கப்பட்டது.

இந்நிலையில் மதுரை முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம் சார்பில், சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கை முடிக்க மேலும் 5 மாதம் அவகாசம் கோரி உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு நீதிபதி கே.முரளிசங்கர் முன்பு விசாரணைக்கு வந்தது. மாவட்ட நீதிமன்றம் சார்பில், சாத்தான்குளம் வழக்கை விசாரித்த நீதிபதி பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். நீதிபதி பணியிடம் காலியாக இருப்பதால் விசாரணை தாமதமாகிறது எனக் கூறப்பட்டது.

சிபிஐ தரப்பில், இரு மருத்துவர்கள், 1 நீதித்துறை நடுவர், சிபிசிஐடி, சிபிஐ விசாரணை அதிகாரிகள், 3 தனி நபர்கள் என 8 பேரை விசாரிக்க வேண்டியதுள்ளது. எனவே 2 முதல் 3 மாத கால அவகாசம் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதி, சாத்தான்குளம் கொலை வழக்கை விசாரிக்கும் நீதிமன்றத்துக்கு நீதிபதி நியமிக்கப்பட்ட நாளிலிருந்து 3 மாதத்தில் விசாரணையை முடிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

## கச்சத்தீவு மீண்டும் இந்தியாவுக்கு கைமாறுமா?




**ராமேசுவரம்:** இந்தியாவிடமிருந்த கச்சத்தீவு இலங்கைக்கு கைமாறி ஜூன் 28-ம் தேதியுடன் 49 ஆண்டுகளை நிறைவுசெய்கிறது. அத்தீவை மீண்டும் இந்தியா தன்வசப் படுத்துமா? என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

ராமேசுவரத்திலிருந்து 12 கடல் மைல் தொலைவிலும், இலங்கை நெடுந்தீவிலிருந்து 8 கடல் மைல் தொலைவிலும், பாக் நீரிணையில்

அமைந்துள்ளது கச்சத்தீவு. இதன் மொத்த பரப்பளவு 285 ஏக்கர். இதன் அதிகபட்ச அகலமே 300 மீட்டர்தான். ராமேசுவரத்திலிருந்து சுமார் இரண்டரை மணி நேரத்திலும், இலங்கையின் நெடுந்தீவு மற்றும் தலைமன்னாரிலிருந்து சுமார் ஒன்றரை மணி நேரத்திலும் இத்தீவை படகு மூலம் அடையலாம்.

ராமநாதபுரம் சேதுபதி மன்னர்களுக்குச் சொந்தமான கச்சத்தீவை, மண்டபத்தைச் சேர்ந்த மரைக்காயர்கள் குத்தகைக்கு எடுத்து, முத்துக்கள் மற்றும் மீன்பிடிப்புக்காகப் பயன்படுத்தி வந்தனர். 1972-ல் தமிழக அரசால் பதியப்பட்ட ராமநாதபுரம் மாவட்ட கெஸட்டியரில், கச்சத்தீவை ஒருங்கிணைந்த ராமநாதபுரம் மாவட்டத்தின் ஒரு பகுதியாகவும், இத்தீவின் சர்வே எண் 1250 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாரை வார்ப்பு: 1974 ஜூன் 28 அன்று இந்திய - இலங்கை அரசுகளுக்கு இடையே ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதில், இரு நாடுகளுக்கும் இடையிலான கடல் எல்லைக் கோடு வரையறுக்கப்பட்டது. இதன்மூலம் கச்சத்தீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில், இந்திய மீனவர்களின் மீன்பிடிக்கும் உரிமையும், கச்சத்தீவு அந்தோணியார் ஆலயத்துக்கு பக்தர்கள் பாஸ் போர்ட், விசா உள்ளிட்ட ஆவணங்கள் இன்றி சென்றுவரும் உரிமையும் குறிப்பிடப்பட்டிருந்தன.

கச்சத்தீவு கைமாறி 50 ஆண்டுகளான நிலையில், இலங்கையிடமிருந்து கச்சத்தீவை மீட்பது குறித்து ஏஐடியுசி மீனவர் சங்க மாநிலச் செயலாளர் செந்தில்வேல் கூறியதாவது: கச்சத்தீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்ட கடந்த 49 ஆண்டுகளில், இந்திய- இலங்கை சர்வதேச கடல் எல்லையைத் தாண்டியதாக, இதுவரை 360 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.




பலமுறை இலங்கை கடற்படை தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி உள்ளது. இதில் ஏராளமான மீனவர்கள் உடலுறுப்புகளை இழந்துள்ளனர். நூற்றுக்கணக்கான படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கச்சத்தீவில் தமிழக மீனவர்களுக்கு உள்ள உரிமைகளை இலங்கை அரசு மறுத்து வருவதுடன், கச்சத்தீவை தங்களுடைய ராணுவ முகாமாக மாற்றுவதற்கும், இந்தியர்களின் வழிபாட்டு உரிமைகளைப் பறிக்கும் வகையில் அந்தோணியார் தேவாலயத்துக்கு அருகே புத்தர் ஆலயத்தையும் நிறுவியது.

காங்கிரஸ், பாஜக ஆகிய இரு கட்சிகளுக்குமே கச்சத் தீவை மீட்க வேண்டும் என்ற நோக்கம் கிடையாது. அதிமுக, திமுக என இரண்டு கட்சிகளுமே கச்சத் தீவு விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தை நாடுவது அல்லது கடிதங்கள் மூலம் மத்திய அரசை வலியுறுத்துவது போன்ற நடவடிக்கைகளைத்தான் செய்து வருகின்றன. வெளிநாட்டுக் கொள்கையில் நம்நாட்டு நீதிமன்றங்கள் தலையிடவும் முடியாது.

கச்சத்தீவை ஒப்பந்தம் மூலம் இலங்கையிடம் வழங்கப்பட்டதற்கு இந்திய நாடாளுமன்றத்தில் முறையான சட்டம் இயற்றப்படவில்லை. இதனால், கச்சத் தீவை இலங்கைக்கு வழங்கியது செல்லாது என ஐ.நா. சர்வதேச சபையின் மூலம் வாதாடி மீட்க வேண்டும் என்றார்.

**“மேக் இன் இந்தியா” திட்டத்தால் பொருளாதார வளர்ச்சி - பிரதமர் மோடிக்கு அதிபர் புதின் பாராட்டு**



**புதுடெல்லி:** “மேக் இன் இந்தியா" திட்டத்தால் இந்திய பொருளாதாரம் வளர்ந்துள்ளது’’ என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் தெரிவித்துள்ளார்.

மாஸ்கோவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அதிபர் புதின் மேலும் கூறியுள்ளதாவது: பிரதமர் மோடி கடந்த 2014-ல் தொடங்கி வைத்த "மேக் இன் இந்தியா" திட்டம் உள்ளூர் உற்பத்தி, மேம்பாடு, தயாரிப்புகளின் ஒருங்கிணைப்பை ஊக்குவித்துள்ளது. இதற்காக, இந்தியாவில் உள்ள எனது பெரிய நண்பர் மோடியை பாராட்டியே ஆக வேண்டும். அவர் முன்னோக்கு பார்வையால் தொடங்கிய இந்த திட்டம் இந்தியப் பொருளாதாரத்தில் உண்மையிலேயே ஈர்க்கக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நல்ல திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவது யாராக இருந்தாலும் அதனை பின்பற்றுவதால் எந்த தீங்கும் ஏற்பட்டு விடாது.

இந்தியாவை மதிப்புமிக்க முன்மாதிரியாக அங்கீகரித்து, மற்ற நாடுகளும் இதே போன்ற உத்திகளை செயல்படுத்துவதை பரிசீலிக்க வேண்டும். மேற்கத்திய நாடுகளின் பொருளாதார தடைகளுக்கு இடையில் ரஷ்ய நிறுவனங்கள் புதிய வாய்ப்புகளை கவனத்துடன் தேர்வு செய்ய வேண்டும். இதன் மூலம் உள்ளூர் சந்தைக்கு மிகப்பெரிய ஆதரவை வழங்க முடியும். இவ்வாறு புதின் தெரிவித்தார்.

ஆட்டோ மொபைல், மருந்து, ஜவுளி, எலக்ட்ரானிக்ஸ் என 25 துறைகளில் "மேக் இன் இந்தியா" திட்டம் பிரதமர் மோடியால் 2014-ல் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தியா பொருளாதாரத்தை உலகளாவிய உற்பத்தி சக்தியாக இந்த திட்டம் மாற்றியது.

இந்தியா 3.7 டிரில்லியன் டாலர் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் உலக பொருளாதாரத்தில் 5-வது இடம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

உலகளாவிய நிறுவனங்களின் உற்பத்தி மையங்களை ஈர்ப்பதிலும், அன்னிய முதலீட்டை அதிகளவில் கவருவதிலும் இந்தியாவின் பரந்த நுகர்வோர் சந்தை முக்கிய பங்காற்றுகிறது.

**பிரதமரிடம் பேச்சு:** இதனிடையே, உக்ரைன் போர் நிலைமை, ரஷ்யாவில் அண்மையில் ஏற்பட்ட வாக்னர் ஆயுதக் குழுவினரின் கிளர்ச்சி நடவடிக்கைகள் குறித்து பிரதமர் மோடியுடன் தொலைபேசியில் புதின் விவாதித்துள்ளார்.

**மக்கள் தொகை பெருக்கம் இந்தியாவின் வளர்ச்சியில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும்?**




இதுவரையில் மக்கள் தொகை எண்ணிக்கையில் சீனா முதலிடம் வகித்துவந்தது. தற்போது, இந்தியா முதலிடத்துக்கு நகர்ந்துள்ளது. 'வேர்ல்டு பாப்புலேஷன் ரிவியூ' (World Population Review) அமைப்பின் கணக்கீட்டின்படி, இந்தியாவின் மக்கள் தொகை தற்போது 142.78 கோடியாகவும். சீனாவின் மக்கள் தொகை 142.56 கோடியாகவும் உள்ளது.

முன்பு, மக்கள் தொகை பெருக்கம் என்பது நாட்டின் வளர்ச்சியை பாதிக்கும் காரணியாக பார்க்கப்பட்டது. இந்தப் பார்வையின் நீட்சியாகத்தான் 1970-களில் - இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாடு தீவிரமாக்கப்பட்டது. அந்த சமயத்தில் இந்தியா பொருளாதார ரீதியாக பின்தங்கி இருந்தது. தற்போது மக்கள் தொகை பெருக்கம் மீதான உலகளாவிய பார்வை மாறி இருக்கிறது.

உலக அளவில் பொருளாதார வாய்ப்புகள் அதிகரித்துள்ள நிலையில், மக்கள் தொகை பெருக்கம் என்பது ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் காரணியாக பார்க்கப்படுகிறது. இந்தச் சூழலில்தான், மக்கள் தொகையில் சீனாவை இந்தியா முந்தி இருப்பது, சர்வதேச கவனம் ஈர்த்து இருக்கிறது.

மக்கள் தொகை என்பது பெரும் சந்தை வாய்ப்பை உருவாக்கக் கூடியது. மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால், அதற்கேற்ப நுகர்வும் அதிகரிக்கும். நுகர்வைப் பூர்த்தி செய்ய உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது அவசியம். அதிக தொழில் வாய்ப்புகள் உருவாகும். இந்தச் சந்தையை வாய்ப்பைப் பயன்படுத்த உள்ள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் முதலீடுகள் பெருகும். இந்தியாவைப் பொறுத்தவரையில், 2050-ல் தனிநபர் வருமானம் 700 சதவீதம் உயர்ந்து 16 ஆயிரம் டாலராக உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இதனால், மக்களின் நுகர்வு திறன் தற்சமயம் இருப்பதை விட 4 மடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவின் மக்கள் தொகை அதிகரிப்பு என்பது சந்தை வாய்ப்பு என்பதைத் தாண்டி, வேறொரு காரணத்துக்காகவும் முக்கியத்துவம் பெறுகிறது. சீனாவின் மக்கள் தொகை இந்தியாவை ஒப்பிடுகையில் பின்தங்க மட்டும் செய்யவில்லை, சரியவும் ஆரம்பித்திருக்கிறது. 2050-ல் இந்தியாவின் மக்கள் தொகை 160 கோடியாக அதிகரித்திருக்கும் என்றும் சீனாவின் மக்கள் தொகையோ 130 கோடியாக குறைந்திருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. 2050-ல் இந்தியர்களின் சராசரி வயது 38-ஆக இருக்கும் என்றும் அதுவே சீனாவின் சராசரி வயது 50-ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. அதாவது சீனாவில் வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், அதன்மக்கள் தொகையில் இளைய தலைமுறையினரின் எண்ணிக்கைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. 15 முதல் 64 வயது என்பது வேலை செய்வதற்குரிய வயதாக வரையறுக்கப்பட்டிருக்கிறது. இந்த வயதுக்குட்பட்டவர்களே ஒரு நாட்டின் வேலைசார் கட்டமைப்பில் முக்கிய அங்கம் வகிக்கின்றனர்.

தற்சமயம் இந்தியர்களின் சராசரி வயது 29 ஆக உள்ளது. தற்போதைய கணிப்பின்படி, இன்னும் 30 ஆண்டுகளில் அது அதிகபட்சமாக 38-ஆகவே உயரும். இதனால், இந்திய மக்கள் தொகையில், வேலைசார் கட்டமைப்பில் பங்கேற்கும் மக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். இது தொழில் வளர்ச்சியில் இந்தியாவுக்கு பெரும் வாய்ப்பாக பார்க்கப்படுகிறது

தற்போது இந்தியா பொருளாதார ரீதியாக பிரிட்டனை பின்னுக்குத் தள்ளி 5-வது இடத்துக்கு முன்னேறியுள்ளது. 2030-க்கு ஆண்டுக்குள் இந்தியா 3-வது இடம் பிடிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் வளர்ச்சியில் அதன் டிஜிட்டல் கட்டமைப்பும் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களின் பெருக்கமும்



EVA STALIN IAS ACADEMY

முக்கிய அங்கம் வகிக்கின்றன. தற்போது அறிமுகமாகியுள்ள 5ஜி தொழில்நுட்பம் இந்தியாவின் அனைத்துத் துறைகளிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் லட்சக்கணக்கான புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தற்சமயம், இந்திய மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பேர் தாரளமய அறிமுகத்துக்கு - அதாவது 1990-க்கு - பிறகு பிறந்தவர்கள். இவர்கள் நவீன தொழில்நுட்பங்களை கற்றுக்கொள்ளும் திறன்களைக் கொண்டிருப்பது இந்தியாவின் வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளது. அந்தவகையில், இந்தியாவின் அடுத்த 30 ஆண்டுகால தொழில்நுட்ப வளர்ச்சியிலும் இளைய தலைமுறையினரின் பங்களிப்பு மிக முக்கியமானதாக இருக்கும்.

அதேசமயம், மக்கள் தொகை பெருக்கம் சார்ந்து இந்தியாவுக்கு நிறைய சவால்களும் இருக்கின்றன. தற்போது இந்தியாவில் பொருளாதார ஏற்றத்தாழ்வு மிகத் தீவிரமாக நிலவுகிறது. கல்வி மற்றும் சுகாதாரக் கட்டமைப்பில் இந்தியா பின்தங்கி உள்ளது. வேலைவாய்ப்பு சார்ந்தும் கடும் நெருக்கடியில் இந்தியா உள்ளது. வேலைசார் கட்டமைப்பில் பெண்களின் பங்கு மிகக் குறைவாக உள்ளது. இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதன் வழியாகவே, அதிகரித்துவரும் மக்கள் தொகையை, வளர்ச்சிக்கான வாய்ப்பாக இந்தியா பயன்படுத்திக்கொள்ள முடியும். இல்லையென்றால், அது கூடுதல் சுமையாக மாறும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

**ஸ்குவாஷ்: தீபிகா பல்லிகல், ஹரிந்தர் சிங் ஜோடி சாம்பியன் பட்டம் வென்று அசத்தல்**



**ஹுவாங்சோவ்**: ஆசிய கலப்பு இரட்டையர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் தொடர் சீனாவில் உள்ள ஹுவாங்சோவ் நகரில் நடைபெற்றது. இதில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் இந்தியாவின் தீபிகா பல்லிகல், ஹரிந்தர் பால்சிங் ஜோடி தரவரிசையிலில் 2-வது இடத்தில் உள்ள மலேசியாவைச் சேர்ந்த அர்னால்ட, இவான் யூயன் ஜோடியை எதிர்த்து விளையாடியது.

இதில் தீபிகா பல்லிகல், ஹரிந்தர் பால்சிங் ஜோடி 11-10, 11-8 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றது. சாம்பியன் பட்டம் வென்ற தீபிகா பல்லிகல், ஹரிந்தர் பால்சிங் இருவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆசிய கபடி சாம்பியன்ஷிப்: 8-வது முறையாக பட்டம் வென்றது இந்திய அணி



கொரியாவில் நடைபெற்ற ஆசிய கபடி சாம்பியன்ஷிப்பில் பட்டம் வென்ற இந்திய அணியினர்.

**புசான்**: ஆடவருக்கான ஆசிய கபடி சாம்பியன்ஷிப் தொடர் கொரியாவில் உள்ள புசான் நகரில் நடைபெற்றது. இதில் இந்தியா, கொரியா, ஜப்பான், ஈரான், சீன தைபே, ஹாங்காங் ஆகிய 6 அணிகள் கலந்துகொண்டுள்ளன. இந்திய அணி லீக் சுற்றில் கொரியா, ஜப்பான், ஈரான்,சீன தைபே, ஹாங் காங் ஆகிய 5 அணிகளையும் வீழ்த்தி இருந்தது.

இந்நிலையில் நேற்று இறுதிப்போட்டி நடைபெற்றது. இதில் இந்திய அணி, ஈரானை எதிர்கொண்டது. பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்திய

அணி 42-32 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்று 8-வது முறையாக சாம்பியன் பட்டம் வென்றது. இந்திய அணி தரப்பில் அதிகபட்சமாக கேப்டன் பவன் ஷேராவத் 10 புள்ளிகள் குவித்தார்.

ஆட்டம் தொடங்கிய 10-வதுநிமிடத்திலேயே பவன் ஷெராவத், அஸ்லாம் இனாம்தார் ஆகியோரது வெற்றிகரமான ரைடுகள் மற்றும் சிறந்த டிபன்ஸ் காரணமாக ஈரானைஆல் அவுட் ஆக்கியது இந்தியஅணி. தொடர்ந்து சிறந்த செயல்திறனால் இந்திய அணி முன்னிலையை அதிகரித்துக்கொண்டே சென்றது. இதன் காரணமாக 19-வது நிமிடத்தில் ஈரான் அணியை மீண்டும் ஆல் அவுட் செய்தனர் இந்திய அணி வீரர்கள்.

முதல் பாதியில் இந்திய அணி 23-11 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. 2-வது பாதியில் ஈரான் அணி பதிலடி கொடுத்தது. இதனால் 29-வது நிமிடத்தில் இந்திய அணி ஆல் அவுட் ஆனது.

போட்டி முடிவடைய 2 நிமிடங்களே இருந்த நிலையில் ஈரான் அணி 31-38 என நெருங்கி வந்தது. இதனால் ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. ஆனால் இந்திய அணி மேற்கொண்டு 4 புள்ளிகளை சேர்த்து போட்டியை வெற்றிகரமாக நிறைவு செய்தது.

**‘இ-நாம்’ திட்டத்தால் இடைத்தரகர்களுக்கு ‘தடா’ - விவசாயிகள் மகிழ்ச்சி**



**உடுமலை:** உடுமலை சுற்று வட்டாரத்தில் இடைத்தரகர்களின் தலையீடின்றி ‘இ-நாம்’ திட்டம் மூலம் மக்காச்சோள விற்பனையில் நேரடியாக ஈடுபட்டு, விவசாயிகள் அதிக வருவாய் ஈட்டி வருகின்றனர்.

திருப்பூர் மாவட்டம், உடுமலை,குடிமங்கலம், மடத்துக்குளம் சுற்று வட்டாரங்களில் தென்னைக்கு அடுத்தபடியாக மிக அதிக அளவில் (சுமார்10,000 ஹெக்டேர்) மக்காச்சோளம் சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு ஹெக்டேருக்கு சுமார் 7 டன் வரை விளைச்சல் கிடைக்கிறது. மாடு,கோழி உள்ளிட்ட கால்நடைகளுக்கு தேவையான தீவன தயாரிப்பில் இதன் தேவை அதிகளவில் இருப்பதால் விவசாயிகளும் ஆண்டுதோறும் மக்காச்சோள சாகுபடியை மேற்கொண்டு வருகின்றனர்.

பல ஆண்டுகளாக இடைத்தரகர்கள் மூலம் விற்பனை செய்த விவசாயிகளுக்கு குறைந்த லாபமே கிடைத்து வந்தது. இந்நிலையில் மத்திய அரசுஒழுங்கு முறை விற்பனைக்கூடங்கள் வாயிலாக இ-நாம் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் விளை பொருளை நேரடியாக தேவைப்படும் நிறுவனங்களுக்கோஅல்லது அதிக விலை தரும் மொத்த விற்பனையாளருக்கோ விவசாயிகள் விற்பனை செய்ய முடியும். கடந்த சிலஆண்டுகளாக இ-நாம் திட்டத்தை பயன்படுத்தும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இது குறித்து உடுமலை ஒழுங்கு முறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் செந்தில்குமார் 'இந்து தமிழ் திசை' செய்தியாளரிடம் கூறியதாவது: கடந்த சில ஆண்டுகளாக மக்காச்சோளம் கிலோ ரூ.20 என்ற அடிப்படையில் விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்து வந்தனர். இ-நாம் திட்டத்தின் மூலம் மக்காச்சோளம் கிலோ ரூ.23 வரை தற்போது விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த ஓராண்டில் 2,000 டன் அளவு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 400 விவசாயிகள் ரூ.6 கோடி வருவாய் ஈட்டியுள்ளனர். தற்போதைய நிலையில் 500 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் தேவைக்காக 5,000 டன் இருப்பு வைக்கும் வகையில் 8 குடோன்களும், 100-க்கும் மேற்பட்ட உலர் கலங்களும் உள்ளன.

மக்காச்சோளத்துக்கான தேவை இருந்துகொண்டே இருப்பதால், உடனுக்குடன் கொள்முதல் செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கும் உடனுக்குடன் பணப்பட்டுவாடா செய்யப்படுகிறது. இதில் இடைத்தரகர்களுக்கு இடமில்லை" என்றார்.

EVA STALIN IAS ACADEMY

**பேட்டரி, எத்தனால், மெத்தனாலில் இயங்கும் போக்குவரத்து வாகனத்துக்கு உரிமக் கட்டணம் ரத்து**



**சென்னை**: தமிழக உள்துறைச் செயலர் பி.அமுதா பிறப்பித்த அரசாணையில் கூறியிருப்பதாவது: பேட்டரி, எத்தனால், மெத்தனால் ஆகியவற்றில் இயங்கும் சுற்றுலா வாகனங்களுக்கு, தேசிய அளவில் சுற்றுலாவுக்கான உரிமம் கட்டணமின்றி வழங்கப்படும் என்று மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

**தேவையற்ற குழப்பங்கள்**: இதை தமிழகத்தில் செயல்படுத்தும்போது தேவையற்ற குழப்பங்கள் மற்றும் கள அளவில் பிரச்சினைகள் ஏற்படும். எனவே,பேட்டரி, எத்தனால், மெத்தனாலில் இயங்கும் அனைத்துபோக்குவரத்து வாகனங்களுக்கும் (சரக்கு வாகனம் தவிர்த்து) கட்டணமின்றி உரிமம் வழங்குவதன் மூலம் தேவையற்ற குழப்பத்தைத் தவிர்க்கலாம் என் குறிப்பிட்டு, போக்குவரத்து ஆணையர் கடிதம் அனுப்பியுள்ளார்.

இதை கவனமாகப் பரிசீலித்த அரசு, "பேட்டரி, மெத்தனால், எத்தனால் ஆகியவற்றின் மூலம்இயங்கும் போக்குவரத்து வாகனங்களுக்கு எவ்வித உரிமக் கட்டணமின்றி, உரிமம் வழங்கப்படும்" என ஆணையிடுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.